# பாட்டும் கதையும்

இயற்றியோர் :

கவிஞர் குழந்தையன்பன்

(கவிஞர் மு கி சுந்தரம்)

வேலா பதிப்பகம்

ஈரோடு - 1

முதற் பதிப்பு—1965

பதிப்புரிமை வெளியீட்டார்களுடையது.

© 1965

விலை: ரூ. 1-50

ஓவியம்: இராசன்

---

அச்சிட்டோர்: தி மதராஸ் சிடி பிரிண்டர்ஸ், சென்னை - 1.

# படையல்

நாலாய் வகுத்திட்ட
அறம்பொருள் வீடின்பம்
நம்மைச் சார

மேலாம் கருத்துக்கள்
மின்னத் தமிழ்மொழியில்
நல்ல நல்ல

நூலாய்ப் பதிப்பித்து
நும்க்கென்றும் சலியாமல்
தொண்டு செய்த

**வேலாயுதன்** றனக்கு
விரும்பிப் படைக்கின்றோம்
இந்த நூலை.

இங்ஙனம்

**பதிப்பகத்தார்**

ஈரோடு - 1
*10—2—65*

சேலம்-1

சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.
கழகக் கல்வி அலுவலர்

# சிறப்புரை

கவிஞர் திரு. குழந்தையன்பரின் "பாட்டும் கதையும்" என்ற இக்கவிதை நூல் குழந்தையுலகுக்கான ஓர் இனிய படைப்பாகும். எளிய, இனிய, கருத்தாழம் மிக்க, பாடற்சுவை மல்கிய பாக்கள் பல இந்நூலில் அடங்கியுள்ளன. ஆசிரியர் குழந்தைகளோடு ஒரு குழந்தையாக இருந்து அவர்களின் மனவியல்புகளை நன்குணர்ந்து இந்நூலை யாத்துள்ளார் என எண்ணத் தோன்றுகிறது.

படிப்போர் மனதைக் கவரக் கூடியதாய், படிப்பவர் தம்மை யறியாமலேயே பன்முறையும் சொல்லி மகிழத் தக்கதாய் அமைவதே சிறந்த பாடலாகும்.

இந்நூலில்,

"சோலைக் குயிலே சாய்ந்தாடு
சோழன் மகளே சாய்ந்தாடு"

"பூ பூ.........புன்னைப்பூ
கா கா.........கத்தரிக்கா
தா தா.........தந்தனத்தா"

என்ற பாடல்களும், இவை போன்றமைந்துள்ள இன்னும் பல பாடல்களும் குழந்தைகள் வாயோயாது பாடி மகிழும் சிறப்புப் பெற்றவைகளாக உள்ளன.

"பாட்டும் கதையும்" படிக்கும் போதே குழந்தைகளின் பண்பும் வளர வேண்டும் என்ற உள்நோக்கு, நூலின் பல இடங்களில் பரந்துபட்டுக் காணப்படுகிறது.

"எண்ணும் எழுத்தும் கண்ணாகும்
ஏட்டுக் கல்வி பொன்னாகும்"

"ஔவை உன்றன் பாட்டியடா
அழகாய் அஆ கற்றிடடா"

என்று கல்வியின் மேன்மையையும்,

"ஒன்று கண்ணே ஒன்று
உலக மெல்லாம் ஒன்று"

என்பதன் மூலம் உலக ஒருமைப்பாட்டையும்,

"அன்னையைப் போலொரு தெய்வம்—இந்த
அகிலத்தில் வேறெது மில்லை"

"தந்தைசொல் போலொரு நீதி—இந்தத்
தாரணி மீதினில் இல்லை"

என்ற வரிகளால் தாய் தந்தையரைப் போற்ற வேண்டிய தன்மையினையும் ஆசிரியர் எடுத்துரைத்துள்ள பாங்கு எண்ணி மகிழ்தற்கேற்றவையாம்.

கவிஞரின் சிறந்த சொல்லாட்சி நம்மை இறும்பூதடையச் செய்கிறது. குழந்தைகளைச் "சோலைக் குயில், சித்திரை நிலவு, தங்கச்சிலை, முத்துச்சரம்" என்றழைப்பதும்,

நிலவினை, "வெண்ணெய் உருண்டையாக, வெள்ளித் தட்டாகக்" காணுவதும் அதற்கேற்ற எடுத்துக் காட்டுகளாம்.

வரிக்கு வரி சிறப்புப் பெற்றுள்ள இந்நூல் குழந்தைகட்குக்

களிப்பின் கூட்டல்
சோர்வின் கழித்தல்
பண்புகளின் பெருக்கல்
சுவைகளைப் பகுத்துத் தரும் வகுத்தல்

குழந்தைகட்கான இலக்கியங்கள் நம் நாட்டில் மிகுதியாகத் தோன்ற வேண்டுமென நல்லறிஞர்கள் எண்ணும் இவ்வேளையில் இந்நூலை வெளியிடுவதன் மூலம் வேலா பதிப்பகத்தார் குழந்தையுலகுக்குப் பெருந் தொண்டாற்றிய பேறு பெறுகின்றனர். இத்தகைய சுவைமிக்க நூல்கள் பல வெளியிடுவதன் மூலம் அவர்கள் தொண்டு மேலும் மலர வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

அன்பன்,

*17—2—65* செல்லப்பன்

# என்னுரை

பள்ளி செல்லும் பிள்ளைகள் மகிழத்
தெள்ளு தமிழில் தேனடை தந்தேன்.
உள்ளம் இனிக்க உயிரும் இனிக்க
அள்ளி உண்க! ஆடுக! பாடுக!
பிஞ்சுப் பாப்பா, பின்னல் பாப்பா,
கொஞ்சும் சிறுவர், கூடிப் பாடச்
செஞ்சொற் பாட்டும், சிறுகதை விருந்தும்,
நீதிக் கதையும் நிறையக் கிடைக்கும்.
எல்லாச் சிறுவரும் இனிது படித்து
நல்லவ ராக நாளும் வளர்க!
சொல்லப்பர் என அனைவரும் போற்றும்
**செல்லப்பர்** எனும் சிலம்பிசைச் செல்வர்
மதிப்புரை தந்து மதிப்பளித் தார்கள்
அன்னவர் தமக்கும், கன்னற் சாற்றை
நூலாய்த் தந்து நாளும் படைக்கும்
**வேலா பதிப்பகத் தார்க்கும்** என்றன்
நன்றியும் வாழ்த்தும் உரித்தா குகவே!

அன்புக்

சேலம்
10—2—65

**குழந்தையன்பன்**

## முதல் பகுதி

# பொருளடக்கம்


| எண் | பாட்டு | பக்கம் |
|---|---|---|
| 1. | வணக்கம் | 9 |
| 2. | சாய்ந்தாடு | 10 |
| 3. | வண்ணத்துப் பூச்சி | 11 |
| 4. | நிலா | 12 |
| 5. | வட்டமிடும் காக்கை | 13 |
| 6. | இரயில் வண்டி | 15 |
| 7. | காந்தித் தாத்தா | 16 |
| 8. | ஒன்று கண்ணே ஒன்று | 17 |
| 9. | நரியும் நண்டும் | 18 |
| 10. | நாயும் கழுதையும் | 20 |



# வணக்கம்

தாயும் தெய்வம்

தந்தையும் தெய்வம்

அன்புடன் படிக்கும்


அருந்தமிழ் தெய்வம்

செந்தமிழ் நாடு

சிறந்தவோர் தெய்வம்

ஆசான் தெய்வம்

அவரடி பணிவோம்.




சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு

சாயல் மயிலே சாய்ந்தாடு

சோலைக் குயிலே சாய்ந்தாடு

சோழன் மகளே சாய்ந்தாடு

சித்திரை நிலவே சாய்ந்தாடு

சின்னக் கண்ணே சாய்ந்தாடு

தங்கச் சிலையே சாய்ந்தாடு

தாமரைப் பூவே சாய்ந்தாடு

முத்துச் சரமே சாய்ந்தாடு

முத்தந் தருவேன் சாய்ந்தாடு

# வண்ணத்துப் பூச்சி



வண்ணவண்ணப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
வானவில்லைப் போல
வட்டமிடும் பூச்சி
தேனுண்ணப் பூவைத்
தேடிவரும் பூச்சி
துத்திப்பூப் பூச்சி
தும்பிக்கைப் பூச்சி
பஞ்சவர்ணப் பூச்சி
பறக்கும் பட்டுப் பூச்சி.





# நிலா

அம்புலி அம்புலி வாவாவா
ஆசை நிலவே வாவாவா
வெள்ளித் தட்டம் நீதானா?
வெண்ணெய் உருண்டை நீதானா?
வானில் ஏறிச் செல்லுகிறாய்
வட்டக் காட்சி நடத்துகிறாய்
விண்ணில் தவழ்ந்து செல்லுகிறாய்
வெள்ளி விழாவும் நடத்துகிறாய்
மலையின் பின்னால் மறையாதே
மாதம் மாதம் குறையாதே
கொஞ்சிப் பேச வருவாயா?
குழந்தைக் கின்பம் தருவாயா?

# வட்டமிடும் காக்கை

வட்ட மிடும் காக்கை
வடை திருடும் காக்கை
கத்து கின்ற காக்கை
கா கா கா






வெள்ளை வெள்ளை வாத்து
விளையாடும் வாத்து
குள்ளக் குள்ள வாத்து
குவாக் குவாக் குவாக்


எலி பிடிக்கும் பூனை
எங்கள் வீட்டுப் பூனை
மீசை வைத்த பூனை
மியாவ் மியாவ் மியாவ்





தழை தின்னும் ஆடு
தலையாட்டும் ஆடு
மேட்டுப் பட்டி ஆடு
மே மே மே

ஆலம்பாடிக் காளை
அழகான காளை
மயிலைநிறக் காளை
மா மா மா





தாவுகின்ற குரங்கு
தஞ்சாவூர்க் குரங்கு
ஊஞ்சலாடும் குரங்கு
உர் உர் உர்




குப்குப் வண்டி

கூச்சலிடும் வண்டி

அழகான வண்டி

அரக்கோணம் வண்டி

தண்டவாளம் விட்டுத்

தடம்புரளும் வண்டி

நீராவி வண்டி

நீண்ட இரயில் வண்டி.



# காந்தித் தாத்தா

கைராட்டைத் தாத்தா
கதர் வேட்டித் தாத்தா
பொக்கைவாய்த் தாத்தா
புன்சிரிப்புத் தாத்தா
ஆசிரமத் தாத்தா
ஆட்டுப்பால் தாத்தா
வெள்ளைக்காரன் ஆட்சியை
விரட்டிவிட்ட தாத்தா
ஈடில்லாத் தாத்தா
எங்கள் காந்தித் தாத்தா.

# ஒன்று கண்ணே ஒன்று



ஒன்று கண்ணே ஒன்று
உலகமெல்லாம் ஒன்று
இரண்டு கண்ணே இரண்டு
என்விழிகள் இரண்டு
மூன்று கண்ணே மூன்று
முத்தமிழும் மூன்று
நான்கு கண்ணே நான்கு
நாற்பொருள்கள் நான்கு
ஐந்து கண்ணே ஐந்து
கையில் விரல் ஐந்து
ஆறு கண்ணே ஆறு
அறுசுவைகள் ஆறு
ஏழு கண்ணே ஏழு
இனிக்கும் இசை ஏழு
எட்டுக் கண்ணே எட்டு
எண்திசைகள் எட்டு
ஒன்பது கண்ணே ஒன்பது
நவதானியம் ஒன்பது
பத்துக் கண்ணே பத்து
இருகை விரல் பத்து.

# நரியும் நண்டும்




ஆற்றங் கரையில் ஓர் நண்டு
அழகாய் ஆடித் திரிகையிலே
காற்றைப் போல விரைந்தோடிக்
காட்டு நரியும் வந்ததடா!

நரியைக் கண்ட அந்நண்டு
நடுக்கத் தோடு பயம்கொண்டு
விரைவில் பொந்தில் புகுந்ததடா
வீணாய் நரியும் நின்றதடா!

வாலைப் பொந்தில் விட்டதடா
வாலால் நண்டைத் தொட்டதடா
கோல நண்டும் நரிவாலைக்
கொடுக்கால் துண்டு செய்ததடா.

ஒருநாள் ஆற்றங் கரையை நோக்கி நரியொன்று வேகமாக ஓடிவந்தது. கரையில் திரிந்து கொண்டிருந்த ஒரு நண்டு, நரியைக் கண்டதும் தன் வளைக்குள் சென்று மறைந்து கொண்டது. ஏமாற்றத்தோடு நின்ற நரி, தன் வாலை வளைக்குள் விட்டது. நண்டு சினங்கொண்டு வஞ்சக நரியின் வாலைக் கொடுக்கால் துண்டு செய்தது.

“எதிரியின் இருப்பிடத்திற்குச் சென்று நாம் வாலாட்டக் கூடாது.”






சலவைத் தொழிலாளி — கந்தன்
சடைநாய் வளர்த்துவந்தான்
விலகிச் செல்லாமல் — அந்நாய்
வீட்டைச் சுற்றிவரும்

காலைப் பொழுதினிலே — கந்தன்
காலைச் சுற்றிவரும்
மாலைப் பொழுதினிலே — அவன்
மடியில் விளையாடும்

வாலைக் குழைத்துவரும் — அவனை
வாயால் நக்கவரும்
மேலே தாவிவிழும் — பக்கம்
மெல்லக் குதிபோடும்

அழுக்கு மூட்டையினை — நாளும்
ஆற்றுக் கேற்றிவரக்
கழுதை ஒன்றினையும் — கந்தன்
காத்து வளர்த்துவந்தான்

நாயின் விளையாட்டைக் — கழுதை
நாளும் பார்த்துவிட்டுப்
பாய்ந்து குதித்தொருநாள் — கந்தன்
பக்கம் சென்றதுவாம்


காலைத் தூக்கியதாம் — அவன்
கழுத்தில் மோதியதாம்
வாலைக் கிளப்பியதாம் — உரக்க
வாயால் கத்தியதாம்

கையில் கோலெடுத்தான் — கந்தன்
காலை முரித்துவிட்டான்
மெய்யும் புண்ணுகக் கழுதை
மெத்த வருந்தியது.

கந்தன் ஒரு சலவைத் தொழிலாளி. அவன் அன்புடன் ஒரு சடை நாயையும், அழுக்கு மூட்டை சுமக்க ஒரு கழுதையையும் வளர்த்துவந்தான். நாய் மிகவும் நன்றியுள்ள விலங்கல்லவா? தனக்கு உணவிட்டுப் பாது காக்கும் கந்தனைக் கண்டவுடன் நாய் வாலை ஆட்டும்; அவன் காலைச் சுற்றிவரும்; அவன் மடியில் விளையாடும்; தன் நாவினுல் அவனை நக்கும்.

நாய் கந்தனேடு நாள்தோறும் விளையாடி மகிழ்வதைக் கழுதை பார்த்துக் கொண்டு இருந்தது. அப்படி விளையாடத் தனக்கு மட்டும் உரிமையில்லையா என்று கழுதை எண்ணியது. ஒரு நாள் கந்தன், மாலையில் தன் வீடு திரும்பினன். கழுதை மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது; கந்தனிடம் வாலைக் கிளப்பிக் கொண்டு ஓடியது; தன் முன்னங் கால்களைத் தூக்கி அவன் மீது வைத்தது; 'காள் காள்' என்று கத்தியது. கழுதையின் செயலைக் கண்ட கந்தன் மிகவும் சினங் கொண்டான்; அருகில் கிடந்த கோலை எடுத்தான்; கழுதையை நன்ருக அடித்து நொறுக்கி விட்டான்.

"நிலைமைக் கேற்பத் திருப்தியுடன்
வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்."



## இரண்டாம் பகுதி

# பொருளடக்கம்


| எண் | பாட்டு | பக்கம் |
|---|---|---|
| 1. | கண்ணீர் விடுவோம் | 25 |
| 2. | பச்சைக் கிளி | 26 |
| 3. | பாரதி | 27 |
| 4. | ஆரு வந்தாங்கோ? | 28 |
| 5. | நடைபோடு | 29 |
| 6. | பூ பூ | 30 |
| 7. | அது என்ன? | 31 |
| 8. | அன்னையும் தந்தையும் | 32 |
| 9. | குருடரும் யானையும் | 33 |
| 10. | கோடரிக் காம்பு | 35 |




# கண்ணீர் விடுவோம்

கண்ணீர் விடுவோம்!
கண்ணீர் விடுவோம்!
புண்ணியன் ஏசு
பொன்னடி மலரில்
கண்ணீர் விடுவோம்!
கண்ணீர் விடுவோம்!

தொழுது வணங்குவோம்!
தொழுது வணங்குவோம்!
அழுது கண்ணீரை
ஆறாய்ப் பெருக்கிச்
சிலுவையில் மரித்த
சேசு நாதனைத்
தொழுது வணங்குவோம்!
தொழுது வணங்குவோம்!

# பச்சைக்கிளி



பச்சைக் கிளியே! பச்சைக் கிளியே!

பறந்து வருவாயா?

பறந்து வந்து கோவைக் கனியைப்

பறித்துத் தருவாயா?

சொக்குப் பச்சைச் சுந்தரி யம்மா

சும்மா வாயேண்டி

பக்கம் வந்தே அக்கா என்று

பாட்டுச் சொல்லேண்டி

தென்னங் கீற்றில் ஊஞ்ச லாடத்

தினமும் வருவாயா?


கன்னம் என்ற தேமாங் கனியைக்

கடிக்க வருவாயா?



# பாரதி

எட்டை நகர்ப் பாரதி
இணையற்ற பாரதி
மீசை வைத்த பாரதி
மிடுக்கான பாரதி
பாப்பாவுக்குக் கற்கண்டுப்
பாடல் தந்த பாரதி
புதுவை சென்ற பாரதி
போர்முரசுப் பாரதி
முண்டாசுப் பாரதி
முத்தமிழ்த் தேர்ச் சாரதி.




ஆரு வந்தாங்கோ ?

அண்ணன் வந்தாங்கோ

என்ன சொன்னுங்கோ ?

சின்னச் சின்னக் கணக்கிரண்டு

போடச் சொன்னுங்கோ

கதையும் பாட்டும் எடுத்துவைத்துப்

படிக்கச் சொன்னுங்கோ

கட்டுச் சோற்றைத் தின்றுவிட்டுத்

தூங்கச் சொன்னுங்கோ.





அன்னம் போல நடைபோடு
ஆடி ஓடி விளையாடு
இன்னும் என்ன கண்மணியே
ஈடில் லாத பொன்மணியே
உன்னைப் போல நல்லவரார்?
ஊரில் உன்போல் வல்லவரார்?
என்னை விட்டுப் பிரியாதே
ஏங்க வைத்துத் திரியாதே
ஐந்து விரலும் பூவிதழோ?
ஐயா உன்கை தாமரையோ?
ஒன்றுக் கொன்று மென்மையடா
ஓடும் உன்றன் கால்களடா
ஒளவை உன்றன் பாட்டியடா
அழகாய் அ ஆ கற்றிடடா.





பூ பூ... புன்னைப்பூ
பொன்னி கொண்டையில் தாழம்பூ
கா கா... கத்தரிக்கா
கடையில் விற்கிற பாவக்கா
தா தா... தந்தனத்தா
தாமரைப்பூப் பூத்ததா ?
மா மா... மங்கம்மா
மதுரைக்கு நாம் போவோமா ?

# அது என்ன?


கூரைமேல் ஏறிநிற்கும்
குப்பை கிளறிநிற்கும்
வீரமுடன் சண்டையிடும்
விடியுமுன் எழுப்பிவிடும்.
அது என்ன?





வீதியிலே வெள்ளிப் பணம்
விட்டுவிட்டு மின்னும் பணம்
பகலில் தொலைந்த பணம்
இரவில் கிடைத்த பணம்
அது என்ன?

பட்பட் குதிரை
பாலிஷ் குதிரை
நானேறும் குதிரை
நடராசன் குதிரை
அது என்ன?





கடலோரம் பூக்கும் பூ
கட்டிவைத்த மூட்டைப் பூ
தின்றால் கசக்கும் பூ
தெருத்தெருவாய் விற்கும் பூ
அது என்ன?



# அன்னையும் தந்தையும்

சோறு சமைப்பவள் அன்னை — என்னைச்
சுமந்து வளர்ப்பவர் தந்தை
வாரி அணைப்பவள் அன்னை — தின்ன
வாங்கித் தருபவர் தந்தை.

முத்தம் தருபவள் அன்னை — உச்சி
மோந்து வளர்ப்பவள் அன்னை
கத்தும் குரலினைக் கேட்டால் — மெத்தக்
கண்ணீர் விடுபவள் அன்னை.

பள்ளிக் கெனைக்கூட்டிச் சென்று — நான்
பாடம் படிப்பதற் கென்று
அள்ளிப் பலநூல்கள் தந்து — என்னை
அன்புடன் காப்பவர் தந்தை.

அன்னையைப் போலொரு தெய்வம்—இந்த
அகிலத்தில் வேறெது மில்லை
தந்தைசொல் போலொரு நீதி — இந்தத்
தாரணி மீதினில் இல்லை.

# குருடரும் யானையும்




நான்கு குருடர்கள் வந்தனரே — அந்த
நால்வரும் ஒன்றாகக் கூடினரே
ஆனையைக் காண விரும்பினரே — அதன்
அருகில் நால்வரும் சென்றனரே.

காலினைத் தொட்டான் ஓர்குருடன் — யானை
கம்பத்தைப் போல இருக்குதென்றான்
வாலினைத் தொட்டான் ஓர்குருடன்—குப்பை
வாரும் துடைப்பத்தைப் போன்றதென்றான்.

தும்பிக்கை தொட்டான் ஓர்குருடன்—யானை
தோன்று துலக்கைபோல் என்றுசொன்னான்
தம்பி! முறமென்று நம்பிவிட்டான்—காதைத்
தடவிப் பார்த்த மற்றொருவன்.

நான்கு குருடர்கள் ஒன்று சேர்ந்து யானையைப் பார்க்கப் புறப்பட்டார்கள். ஒருவன் யானையின் காலைத் தொட்டுப் பார்த்துவிட்டு யானை கம்பத்தைப்போல இருக்கிறதென்று சொன்னான். வாலைத் தொட்ட குருடன், யானை துடைப்பத்தைப்போல் இருக்கிறது என்றான். மற்றொரு குருடன் யானையின் தும்பிக்கையைத் தொட்டுப் பார்த்துவிட்டு, யானை உலக்கையைப்போல் இருக்கிறதென்று கூறினான். யானையின் காதைத் தடவிப் பார்த்த மற்றொருவன், யானை முறத்தைப் போல் இருக்கிறது என்று சொன்னான்.






தண்டும் பெருங்கிளையும் — பச்சைத்
தழையும் காய்கனியும்
கொண்ட மரத்தடியில் — ஒரு
கோடரிக்கா ரன்வந்தான்

தீம்பு நினைப்புடையோன் — கொடுந்
தீய கருத்துடையோன்
காம்பு செய்வதற்கே — ஒரு
கட்டை வேண்டுமென்றான்.

ஓங்கி உயர்ந்தமரம் — அவன்
உள்ளம் அறியாமல்
தாங்கி யிருந்தகிளை — ஒன்றைத்
தந்தே உதவியது

கோடரிக் காம்புசெய்தான் — துளையில்
கொண்டதை மாட்டிவிட்டான்
நீடிய அம்மரத்தை — வெட்டி
நிலத்தில் சாய்த்துவிட்டான்

தீயவர்க் கன்புசெய்தால் — நம்மைத்
தீமைகள் தேடிவரும்
நாயினுக் கன்புசெய்தால் — அது
நம்மைச் சுற்றிவரும்.

காட்டில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதனடியில் கோடரிக்காரன் ஒருவன் வந்து நின்றான். அவன் கோடரி காம்பில்லாமல் இருந்தது. காம்பு இல்லாவிட்டால் கோடரி பயன்படாதல்லவா? அவன் கோடரிக்குக் காம்பு செய்யச் சிறிய கிளையொன்றைக் கொடுத்து உதவுமாறு மரத்தைக் கேட்டான். மரமும் உள்ளமிரங்கிச் சிறிய கிளையொன்றை அவனுக்குக் கொடுத்தது. அவன் அக் கிளையைச் செதுக்கிக் காம்பு செய்தான். அக் காம்பைக் கோடரியின் துளையில் மாட்டினான். பிறகு அக்கோடரியால் அந்த மரத்தையே வெட்டிச் சாய்த்து விட்டான்.

"தீயவர்க்குதவி செய்தால், நம்மைத்
தீமை தேடிவரும்."



## மூன்றும் பகுதி

# பொருளடக்கம்


| எண் | பாட்டு | பக்கம் |
|---|---|---|
| 1. | கும்பிடுவோம் | 39 |
| 2. | பாரதிதாசன் | 40 |
| 3. | கல்வியில் முன்னேறுவோம் | 41 |
| 4. | மாதங்கள் | 42 |
| 5. | டம் டம் டம் | 43 |
| 6. | பின்னல் | 44 |
| 7. | நேரு பெருமான் | 45 |
| 8. | ஊரும் பேரும் | 47 |
| 9. | பல்போன சிங்கம் | 50 |
| 10. | கழுதையும் உப்பு மூட்டையும் | 54 |



# கும்பிடுவோம்

தந்தை தாயைக் கும்பிடுவோம்
தமிழைத் தாய்போல் வணங்கிடுவோம்

ஆசான் அடியைப் போற்றிடுவோம்
அழகாய்ப் பாடம் கற்றிடுவோம்

பள்ளிக் கூடம் சென்றிடுவோம்
பாட்டும் கதையும் படித்திடுவோம்

துள்ளித் துள்ளி ஆடிடுவோம்
தோட்ட வேலை செய்திடுவோம்

எண்ணும் எழுத்தும் கண்ணாகும்
ஏட்டுக் கல்வி பொன்னாகும்.

# பாரதிதாசன்



பாரதிக்கு மாணவன்
பாட்டுப்பாட வல்லவன்
யாரெதிர்த்த போதிலும்
போருடற்ற வல்லவன்.

மெத்தவும் படித்தவன்
மீசை வைத்த பாண்டியன்
முத்து முத்துப் பாடலால்
முத்தமிழ் வளர்த்தவன்.

செந்தமிழ்க்குக் காவலன்
சீர்திருத்த நாவலன்
சொந்தமென்று வந்தநம்
சுப்புரத்ன பாவலன்.

# கல்வியில் முன்னேறுவோம்!



அன்புமிக்க தோழரே
இன்பமுடன் ஆடுவோம்
நொண்டி நொண்டி ஓடுவோம்
வண்டமிழில் பாடுவோம்.

காலையில் எழுந்ததும்
காலைக்கடன் முடிப்போம்
கல்வியைத் தொடங்குவோம்
கல்வியைத் தொடங்குவோம்.

வள்ளுவன் தொகுத்த குறள்
வாயினிக்கப் பாடுவோம்
தெள்ளிய தமிழ்க்கவிதைத்
தேனெடுக்க ஓடுவோம்.

பள்ளியை அடையுவோம்
பாடங்களைப் படிப்போம்
கல்வியில் முன்னேறுவோம்
கல்வியில் முன்னேறுவோம்.



# மாதங்கள்

சித்திரை போனால் வைகாசி
சிலையே! வாராய் கைவீசி
ஆனி ஆடி ஆவணியாம்
அழகாய் உன்மேல் தாவணியாம்
புரட்டா சிக்குப் பின்னாலே
பொன்னே! ஐப்பசி கார்த்திகையாம்
மார்கழி மாதம் பனிமாதம்
மறுபடி வருவது தைமாதம்
மாசி பங்குனி வந்துவிடும்
மாதக் கணக்கு முடிந்துவிடும்.



# டம் டம் டம் !



காளை மாடு தலையாட்டி
　　கல்கல் கல்கல் கல்கல்கல்
சாலை வழியில் சென்றதடா
　　ஜல்ஜல் ஜல்ஜல் ஜல்ஜல்ஜல்

மத்தள ஓசை கேட்குதடா
　　டம்டம் டம்டம் டம்டம்டம்
மன்னன் பேரிகை முழங்குதடா
　　கும்கும் கும்கும் கும்கும்கும்

பட்டாளக் குதிரை போகுதடா
　　பட்பட் பட்பட் பட்பட்பட்
பள்ளிக் கூடம் விட்டதடா
　　டண்டண் டண்டண் டண்டண்டண்.

---

குறிப்பு :— ஒரு மாணவன் பாட்டைப் பாட, மற்ற மாணவர்கள் சேர்ந்து ஓசையை மட்டும் சொல்லலாம்.




பட்டுப்போலப் பின்னல்
பளபளக்கும் பின்னல்
நெட்டையான பின்னல்
நீண்டசடைப் பின்னல்

அத்தைபோட்ட பின்னல்
ஆடுகின்ற பின்னல்
கொத்துமலர்ப் பின்னல்
குஞ்சம்வைத்த பின்னல்

படமெடுத்த பாம்பு
பர்வதத்தின் பின்னல்!
குடமெடுத்து வந்தால்
குதிக்குமவள் பின்னல்!



# நேரு பெருமான்

மேரு மலைபோலே — இந்த
மேதினியில் உயர்ந்தோன்
நேரு பெருமானை — நெஞ்சில்
நித்தம் நினைத்திடுவோம்.

பூக்கும் மலர்களெலாம் — அவன்
புன்னகை தானோடா ?
ஆக்கள் தரும்பாலும் — அவன்
அமுத மொழியோடா ?

திங்கள் தரும்குளிர்தான் — அவன்
திருவிழிப் பார்வையடா
பொங்கும் கடல்மடைதான் — அவன்
புகன்ற சொற்களடா

சாதி மதத்தாலே — வரும்
சண்டைகளை வெறுத்தான்
நீதிக் கொடிபிடித்தான் — நம்
நெஞ்சில் நிலைத்துவிட்டான்

பாரில் அமைதிஎன்றான் — நல்ல
பஞ்ச சீலமென்றான்
மார்பினில் ரோசாவை — அவன்
மகிழ்ந்து சூடிவந்தான்


மாலைச் செங்கதிரோன் — மேற்கு
மலையில் வீழ்வதைப்போல்
பால்வடியும் முகத்தான் — நேருப்
பண்டிதனும் மறைந்தான்

மாந்தரில் மாணிக்கமும் — இன்று
மண்ணில் மறைந்ததடா
காந்தச் சிலையுருவும் — இன்று
கற்பனை யானதடா.

காவியமும் படைப்போம் — அவன்
கதையை எழுதிவைப்போம்
ஓவியமும் படைப்போம் — அவன்
உருவைத் தீட்டிவைப்போம்.



# ஊரும் பேரும்



பாண்டியன் ஆண்ட ஊர்
பைந்தமிழ் வளர்த்த ஊர்
சங்கம் இருந்த ஊர்
சாற்றடி என்ன ஊர்?

**மதுரை**

நீர்வளம் மிக்க ஊர்
நெல்வயல் உள்ள ஊர்
சோழன் ஆண்ட ஊர்
சொல்லடி என்ன ஊர்?

**தஞ்சை**

காவிரி பாயும் ஊர்
கடலில் மறைந்த ஊர்
கண்ணகி பிறந்த ஊர்
கண்மணி என்ன ஊர்?

**காவிரிப்பூம் பட்டினம்**

மண்ணில் உயர்ந்த ஊர்
மாமல்லன் கண்ட ஊர்
சிற்பம் சிறந்த ஊர்
செப்படி என்ன ஊர் ?

**மாமல்லபுரம்**

பல்லவன் ஆண்ட ஊர்
பல்கலைக் கழக ஊர்
அப்பர் இருந்த ஊர்
அந்த ஊர் எந்த ஊர் ?

**காஞ்சி**

மன்னவர் ஆண்ட ஊர்
மலைக்கோட்டை நிற்கும் ஊர்
பொன்னிநீர் பாயும் ஊர்
பூவையே! என்ன ஊர் ?

**திருச்சி**

மலைவளம் சூழ்ந்த ஊர்
மாம்பழம் விளையும் ஊர்
சேரன் ஆண்ட ஊர்
செப்படி! என்ன ஊர் ?

**சேலம்**

## சென்னைப் பட்டினம்

கப்பல்கள் நிற்கும் ஊர்
கல்லூரி மிக்க ஊர்
சென்னப்பன் தந்த ஊர்
செப்படி! என்ன ஊர்?

## கோவை

ஆலைகள் மிக்க ஊர்
அழகான புதிய ஊர்
செல்வர் இருக்கும் ஊர்
செப்படி என்ன ஊர்?






காட்டில் ஓர்கிழவன் — மரக்
    கட்டை வெட்டி வாழ்ந்துவந்தான்
வீட்டில் அழகியதன் — பெண்ணை
    விருப்பத் தோடு வளர்த்துவந்தான்.

காட்டை ஆண்டுவரும் — சிங்கக்
    காவலன் ஓர்நாள் ஓடிவந்தான்
வீட்டில் நுழைந்துவிட்டான் — பெண்ணை
    விழிகளி னால்அவன் பார்த்துவிட்டான்.

“காட்டுக் கதிகாரி — நான்
    கட்டளை உன்றனுக் கிடுகின்றேன்
மாட்டேன் என்னாதே — கிழவா
    மகளை எனக்குக் கொடுத்துவிடு.

மான்குட்டி போன்றவளை — நான்
மணம் செய்துகொள்ள விரும்புகிறேன்
வீண்பேச்சுப் பேசாதே" — என்று
விலங்குக்கரசன் மிரட்டி நின்ருன்.

"காட்டு விலங்கனைத்தும் — நடுங்கக்
கர்ச்சனை செய்கின்ற காவலனே!
மாட்டேன் என்று சொல்லி — இந்த
மண்ணில் நானும் பிழைப்பேனு?

கூரிய கால்நகமும் — உங்கள்
கொடுவாய்ப் பற்களும் கண்டுமகள்
நேரில் வருவதற்கே — மிக
நெஞ்சம் அஞ்சி நடுங்குகிருள்.

கூரிய பற்களையும் — குத்தும்
கொடுவாள் போன்ற நகங்களையும்
வேருடன் பிடுங்கிவிட்டால் — உம்மை
விருப்பமுடன் அவள் மணந்துகொள்வாள்."

என்றுசொன்ணுன் கிழவன் — சிங்க
ஏறும்தன் பற்கள் நகங்களையும்
அன்றே பிடுங்கிவிட்டு — முன்ணுல்
ஆசையுடன் வந்து நின்றதுவாம்.

“பல்லும் நகமுமில்லா — உன்னைப்
பார்த்து நான்மிக அஞ்சுவனோ?
கொல்லுவேன்” என்றுசொல்லிக் — கிழவன்
கோடரி ஒன்றைத் தூக்கிவிட்டான்.


“உன்றன் மகள்வேண்டாம் — நான்
உயிர்பிழைத் தாலின்று அதுபோதும்”
என்றே சொல்லிவிட்டுச் — சிங்கம்
எடுத்தது ஓட்டம் காட்டுக்குள்ளே.


காட்டில் ஒரு விறகுவெட்டி வாழ்ந்து வந்தான். அவன் கிழவன். அவனுக்கு அழகான ஒரு பெண் இருந்தாள். காட்டுக்கு அரசனான சிங்கம், ஒருநாள் கிழவன் வீட்டுப் பக்கம் வந்தது; கிழவனுடைய மகளைப் பார்த்தது; அப்பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்பியது. அப்போது கிழவன் அங்கு வந்தான்.

சிங்கம் அவனை நோக்கி, “ஏ கிழவா! காட்டுக்கு அரசனாகிய நான், உன் பெண்ணை மணந்துகொள்ள விரும்புகிறேன். மறுத்து விடாதே” என்று மிரட்டியது. பெண் கொடுக்க மறுத்துச் சிங்கத்தின் பகையைத் தேடிக் கொள்ளக் கிழவன் விரும்பவில்லை.

“காட்டுக்கு அரசே! உமக்குப் பெண் கொடுக்க நான் மறுப்பேனு? ஆனுல் ஒன்று. என் மகள் உங்களுடைய கூரிய பற்களேயும், கொடுவாள் போன்ற நகங்களேயும் கண்டு அஞ்சுகிருள். அவற்றை எல்லாம் நீங்கள் பிடுங்கி எறிந்துவிட்டு வந்தால், என் மகள் உங்களைத் திருமணம் செய்து கொள்ளத் தடை ஏதும் சொல்லமாட்டாள்” என்று கிழவன் தந்திரமாகப் பேசினுன்.

பெண்ணின்மேல் கொண்ட ஆசையால் சிங்கம் தன்னுடைய பற்களேயும், நகங்களேயும் பிடுங்கி எறிந்து விட்டுக் கிழவன் முன்னுல் வந்து நின்றது. பல்லும் நகமும் இல்லாத சிங்கத்தைக் கண்டு கிழவன் அஞ்சுவானு? சிங்கத்தை விரட்டக் கோடரியைத் தூக்கினுன். சிங்கம் பிழைத்தால் போதுமென்று எண்ணிக் காட்டிற்குள் ஓடியது.





# கழுதையும் உப்புமூட்டையும்

குப்பன் என்ற ஓர்வணிகன்
குண்டுக் கழுதை மீதினிலே
உப்புச் சுமையை ஏற்றிவந்தான்
ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

முட்டிக் கழுதை மூட்டையுடன்
முன்னால் இருந்த ஓடையிலே
குட்டிக் கரணம் போட்டதடா
குழியில் நீரில் விழுந்ததடா.

முட்டிக் கழுதை மூட்டையுடன்
குட்டிக் கரணம் போட்டதனால்
கட்டி வைத்த உப்பெல்லாம்
கரைந்தே நீரில் போச்சுதடா.

உப்புப் பாரம் குறைந்ததனால்
உள்ளம் மகிழ்ந்தே அக்கழுதை
தப்புக் கணக்குப் போட்டதடா
தாவிக் குதித்தே சென்றதடா.

மீண்டும் ஒருநாள் உப்போடு
மெதுவாய் அவ்வழி வரும்போது
வேண்டும் என்றே தண்ணீரில்
வீழ்ந்தது கழுதை மூட்டையுடன்

குப்பன் கழுதை எண்ணத்தைக்
குறிப்பால் அறிந்தான் அப்போது
தப்புக் கருத்தைப் போக்குதற்கே
தக்க தருணம் பார்த்திருந்தான்.

புத்தியற்ற கழுதையின் மேல்
பொதியாய் மணலை ஏற்றிவைத்தே
மெத்த உள்ளம் மகிழ்ச்சியுடன்
மெதுவாய்க் குப்பன் நடந்துவந்தான்.

அருவிக் கருகே வந்தவுடன்
அன்றும் கழுதை காலிடறி
மறுமுறை ஓடையில் விழுந்ததடா
மணலும் நீரில் நனைந்ததடா.

மதியீ னத்தால் அக்கழுதை
மணலை நீரில் நனைத்ததனால்
பொதியும் மிகவே கனத்ததடா
புண்ணாய் முதுகும் போச்சுதடா.

ஒருநாள் ஒருவரை ஏமாற்றி
உலகில் ஒருவன் வாழ்ந்திடலாம்
மறுநாள் மீண்டும் பிழைசெய்தால்
மக்கள் நம்மை விடமாட்டார்.

குப்பன் என்ற ஓர் உப்பு வணிகன் இருந்தான். அவனிடத்தில் ஒரு குண்டுக் கழுதை இருந்தது. குப்பன் உப்புப் பொதியைக் கழுதையின் மீது ஏற்றிச் செல்வது வழக்கம். வழியில் இருந்த நீரோடையில் கழுதை ஒருநாள் உப்புப் பொதியுடன் தவறி விழுந்து விட்டது. மூட்டையில் இருந்த உப்பு, நீரில் கரைந்து போய்விட்டது. இதனால் மூட்டையின் கனம் குறைந்தது. பொதியின் கனம் குறைந்ததால் கழுதை மிகவும் மகிழ்ச்சியடைந்தது.

மீண்டும் ஒரு தடவை உப்புப் பொதியுடன் வந்தபோது, கழுதை வேண்டுமென்றே நீரில் விழுந்தது. இப்போதும் உப்பின்

பெரும் பகுதி கரைந்து போய்விட்டது. கழுதை யின் தந்திரத்தைக் குப்பன் அறிந்தான். கழுதைக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்று எண்ணினான். ஒருநாள் மணல் மூட்டை யொன்றைக் கழுதையின் மேல் ஏற்றிக்கொண்டு குப்பன் நீரோடையின் வழி யாக வந்தான். கழுதை அன்றும் நீரில் விழுந்தது. மணல் நீரில் நனைந்ததால் மூட்டை மிகவும் கனமாகிவிட்டது. கழுதை இன்று சுமை தாளமுடியாமல் தத்தளித்தது. குப்பன் தடியால் நன்றாக அடித்தான். அன்றி லிருந்து கழுதை இது போன்ற தவற்றினைச் செய்வதில்லை.

“ஒருநாள் ஒருவரை ஏமாற்றலாம்
பலநாள் பலரை ஏமாற்ற முடியாது.”



## நான்காம் பகுதி

# பொருளடக்கம்


| எண் | பாட்டு | பக்கம் |
|---|---|---|
| 1. | வள்ளுவர் | 61 |
| 2. | மேகம் | 62 |
| 3. | பெயரும் வினையும் | 64 |
| 4. | கென்னடி | 65 |
| 5. | புருவும் கண்ணாடித் தொட்டியும் | 66 |
| 6. | அறிவுள்ள முத்தன் | 68 |
| 7. | பக்காத் திருடன் | 72 |
| 8. | வண்டியிழுத்த காந்தி மகான் | 76 |
| 9. | ஓநாயும் நாயும் | 78 |
| 10. | பாடும் பாப்பா | 82 |



# வள்ளுவர்

புலவ ரிலேமிக மூத்தவர் — யாரும்
போற்றத் தமிழ்ப்பண்பு காத்தவர்
இலகு திருக்குறள் யாத்தவர் — தமிழ்
இலக்கியத்தில் என்றும் பூத்தவர்.

அறம்பொரு ளின்பங்கள் தந்தவர்—நாட்டை
ஆளும் முறைசொல்லித் தந்தவர்
புறங்கூறு வோரைக் கடிந்தவர் — சூதைப்
பொய்யைக் கொலையை வெறுத்தவர்.

நாட்டி னிலேமுதற் பாவலர் — மக்கள்
நல்லொழுக் கத்திற்குக் காவலர்
தீட்டும் கவிச்சிங்கக் கோவலர் — இவர்
செந்தமி ழில்பெரு நாவலர்.

பாட்டுக் கலையினில் வல்லவர் — இந்தப்
பாரினி லேமிக நல்லவர்
நாட்டை உயர்த்திடும் சொல்லவர் — உயர்
**நான்முக னார்திரு வள்ளுவர்.**




கத்தும் கடலினில் நேற்றிருந்தேன்-விண்ணில்
    கார்மேக மாயின்று மாறிவிட்டேன்
மெத்த உடம்பு கருத்துவிட்டேன்—இன்று
    மேனி நடுங்கக் குளிர்ந்துவிட்டேன்.


கொல்லி மலையைக் கடந்துவந்தேன்-தஞ்சைக்
    கோபுரத் தின்மீது மோதிவந்தேன்
மல்லைக் கலங்கரைத் தீபத்தையும்—என்றன்
    மனது குளிரத் தழுவிவந்தேன்.

காவிரித் தாயினைப் பார்த்துவந்தேன்—அவள்
    கரையருகே சற்று நின்றுவந்தேன்
பூவிரி சோலையின் உச்சியிலே—தங்கிப்
    பொழுதைக் கழித்துப் புரண்டுவந்தேன்.

விண்ணில் இடித்து முழங்கிவந்தேன்-மின்னல்
வேலினை எத்திக்கும் பாய்ச்சிவந்தேன்
கண்ணில் மழைத்துளி சிந்திவந்தேன்-உங்கள்
கவலையை நானின்று போக்கவந்தேன்.

மேற்கு மலையில் குதித்துவந்தேன்—உயர்
மேட்டு ரணையை நிரப்பிவந்தேன்
காற்றினில் ஏறித் தவழ்ந்துவந்தேன்-சோழன்
கல்லணை கூட நிரப்பிவந்தேன்.

ஏங்கும் உழவர் மகிழ்ச்சிபெற்ருர்—தோளில்
ஏரினைத் தூக்கிக் கிளம்பிவிட்டார்
பாங்கியர் சூழ உழத்தியர்கள்—பள்ளுப்
பாடலைப் பாடத் தொடங்கிவிட்டார்.






புல்லைத் தின்னும் ஆடு
புள்ளி மயில்போல் ஆடு.
நம்முயிர் அன்றோ நாடு?
நல்லதை என்றும் நாடு.

ஐந்தும் மூன்றும் எட்டு
அப்பால் போபோ எட்டு.
கையில் வெள்ளித் தட்டு
கையை மெல்லத் தட்டு.

தில்லையிலே தங்க ஓடு
தீமையைக் கண்டால் ஓடு.
நல்லவர்க் கேனிந்தப் பாடு?
நல்ல குரலில்நீ பாடு.

உருளுது வானில் இடி
உரலில் கொட்டி இடி.
பருப்புப் பத்துப் படி
பாட்டும் கதையும் படி.



# கென்னடி

அமெரிக்க நாட்டில் பிறந்தவர் — நல்ல
ஆணழகர் என்று வந்தவர்
இமயத்தைப் போல உயர்ந்தவர்-விண்ணில்
ஏறும் கதிரவன் போன்றவர்.

செல்வச் சிறப்பிலே மன்னவர் — நாட்டுச்
'செனட்டரிலே' மிகச் சின்னவர்
கல்விச் சிறப்பிலே முன்னவர் — இந்தக்
காசினி யார்க்கொரு கண்ணவர்.

சண்டை எதற்கென்று கேட்டவர் — பாரில்
சமரசப் பாதையைப் போட்டவர்.
குண்டடி பட்டு விழுந்தவர் — உள்ளக்
கோவிலில் வந்து நுழைந்தவர்.




மேகத்தில்ஏறிப் பறந்தபுறு — ஒன்று
மிக்க களைப்படைந்து
தாகத்தினாலே வருந்தியது — எங்கும்
தண்ணீரைத் தேடியது.

கண்ணாடித் தொட்டியிலே — நிறையத்
தண்ணீர் இருப்பதனை
கண்ணால் கண்டபுறு — தாவி
முன்னால் சென்றதடா.

கண்ணாடி இடையே — இருப்பதைக்
கருத்தில் எண்ணாமல்
முன்னால் சென்றபுறு — அதன்மேல்
மோதி விழுந்ததடா.

அந்த வழியினிலே — வந்தவோர்
ஆண்மகன் கண்டான்
சொந்தமெனப் பிடித்தான் — அதனைச்
சோறு சமைத்துவிட்டான்.

அவசர மில்லாமல் — எதையும்
அமைதியுடன் செய்தால்
தவறு நடக்காது — துன்பம்
தலையை நீட்டாது.

வானத்தில் சுற்றியலைந்துவிட்டு வந்த ஒரு புறா தாகத்தால் மிகவும் வருந்தியது. ஒரு வீட்டின் மாடியில் கண்ணாடித் தொட்டி இருந்தது. அத் தொட்டியில் நிறையத் தண்ணீர் இருந்தது. தண்ணீரைக் கண்ட புறா தொட்டியை நோக்கி வேகமாகப் பறந்தது. தொட்டியின் கண்ணாடிச் சுவர் புறாவின் கண்களுக்கு, அவசரத்தில் புலப்படவில்லை. சென்ற வேகத்தில் கண்ணாடித் தொட்டியின் சுவரில் மோதிப் புறா மயங்கி விழுந்தது. அப்போது மாடிக்கு வந்த ஒருவன், புறாவைப் பிடித்துக் கறிசமைத்து உண்டுவிட்டான்.

" அவசரம் கூடாது "



# அறிவுள்ள முத்தன்



செங்குன் றூரில் முன்னொருநாள்
செல்வன் ஒருவன் வாழ்ந்துவந்தான்
அங்கவ னுக்குப் பணிசெய்ய
ஆட்கள் பலபேர் இருந்தனரே.

அந்தச் செல்வன் ஒருசமயம்
அயலூர் செல்லப் புறப்பட்டான்
சிந்தை மகிழப் பணியாட்கள்
செல்வன் பின்னால் புறப்பட்டார்.

ஆட்கள் எல்லாம் விரைவாக
ஆளுக் கொன்றாய் அங்கிருந்த
மூட்டை தம்மைத் தாம்தூக்கி
முன்னால் நடந்து சென்றார்கள்.

முத்தன் என்ற பணியாளன்
மூச்சுத் திணற அங்கவற்றுள்
மெத்தப் பருத்த மூட்டையினை
மெதுவாய்ச் சுமந்து நடந்துவந்தான்.

சின்னச் சின்ன மூட்டைகளைச்
சிரசில் சுமந்த பணியாட்கள்
பின்னால் வந்த முத்தனையே
பேசிப் பேசிச் சிரித்தார்கள்.

வெய்யில் நேரம் வந்தவுடன்
வேலைக் காரர் பசிகொண்டார்
நொய்யல் ஆற்றுச் சோலையினை
நோக்கிச் சென்றார் எல்லாரும்.

முத்தன் தனது மூட்டையினை
முன்னால் வைத்தான்; பணியாட்கள்
அத்தனை பேரும் ஆவலுடன்
அதனைப் பிரித்துப் பார்த்தார்கள்.

உணவுப் பொருளை அதில்கண்டார்
உடனே உண்ணத் தொடங்கிவிட்டார்
கணநே ரத்தில் மூட்டையினைக்
காலி செய்து விட்டார்கள்.

பயணம் மீண்டும் தொடங்கியது
பணியா ளர்கள் சுமையோடு
வெயிலின் கொடுமை தாங்காமல்
வேதனை யோடு நடந்தார்கள்.


முத்தன் சென்றான் கைவீசி
மூட்டை தலையில் இல்லாமல்
புத்தி சாலித் தனத்தாலே
போகும் துன்பம் அடியோடு.

செங்குன்றூரில் ஒரு செல்வன் வாழ்ந்து வந்தான். அவனிடம் வேலையாட்கள் பலர் இருந்தனர். செல்வன் ஒருநாள் அயலூருக்குப் புறப்பட்டான். வேலைக்காரர் கூட்டமும் அவனோடு புறப்பட்டது. பயணப் பொருள்களெல்லாம் பல மூட்டைகளாகக் கட்டப் பட்டிருந்தன. வேலைக்காரர்கள் எல்லாரும் ஆளுக்கொரு மூட்டையாகத் தலையில் சுமந்து சென்றனர். அவர்களில் முத்தன் என்றொரு வேலைக்காரன் இருந்தான். அவன் மிகவும் அறிவாளி. அங்கிருந்த மூட்டைகளில் பெரிய மூட்டையை அவன் சுமந்து வந்தான். மூச்சுத் திணற அம்மூட்டையை முத்தன் சுமந்து வருவதைக் கண்ட பணியாட்கள் அவனைக் கேலி செய்தனர்.

நடுப்பகல் நேரம் வந்தவுடன் எல்லாரும் நொய்யல் ஆற்றங்கரைச் சோலையில் தங்கினர். முத்தன் தன் மூட்டையை இறக்கி வைத்தான். அது சோற்று மூட்டை. எல்லா வேலைக்காரர் களும் சேர்ந்து அச்சோற்று மூட்டையைக் காலி செய்துவிட்டனர். சிறிது நேரம் எல்லா ரும் களைப்பாறிவிட்டு மீண்டும் புறப்பட்டனர். மற்றப் பணியாட்கள் தங்கள் மூட்டையைச் சுமந்து கொண்டு புறப்பட்டனர். வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. வெயிலின் கொடுமையைத் தாங்க முடியாமலும், மூட்டை யின் சுமையைத் தாங்க முடியாமலும் எல்லா ரும் வாடினர். முத்தன் கையை வீசிக்கொண்டு நடந்தான்.

"புத்திமான் பலவான் ஆவான்."






பள்ளிச் சிறுவன் பரமசிவம்
    பாடப் புத்தகம் ஒன்றினையே
கள்ளத் தனமாய்க் கவர்ந்துவந்தே
    காட்டிச் சென்றான் தாயினிடம்.

தாயோ சிறிதும் வருந்தாமல்
    தட்டிக் கொடுத்தாள் தன்மகனை
தீயோர் உறவால் பரமசிவம்
    திருடன் என்றே பேரெடுத்தான்.

பலபேர் வீட்டில் கன்னமிட்டான்
    பக்காத் திருடன் ஆகிவிட்டான்
கொலையும் களவும் குடிசூதும்
    குற்றம் என்பதை மறந்துவிட்டான்.

கையும் களவாய் ஓர்நாளில்
காவல் வீரர் பிடித்துவிட்டார்
மெய்யும் புண்ணாய் மாறிடவே
மிலாறு கொண்டு வீசிவிட்டார்.

கையில் விலங்கை மாட்டிவிட்டார்
கன்னத் தில்அடி தீட்டிவிட்டார்
"ஐயோ! ஐயோ!" எனக்கதறி
அன்னை பின்னால் ஓடிவந்தாள்.

வீதியில் சென்ற பரமசிவம்
விரைவாய்த் தாயை அருகழைத்துக்
காதைக் கடித்தே எடுத்துவிட்டான்
கதறித் துடித்தாள் அவன்அன்னை.

தாயின் காதைக் கடித்தவனைத்
தடியால் தாக்க வந்தார்கள்
"நீயும் மகனா?" என்றார்கள்
நீசன் என்றே சொன்னார்கள்.

"பள்ளியில் ஓர்நாள் திருடிவந்தேன்!
பாவம் என்றதைச் சொல்லாமல்
அள்ளி அணைத்தாள்; இக்காதால்
ஆசையுட னதைக்கேட்டு நின்றாள்.

அந்தக் காதைக் கடித்துவிட்டேன்
அதனுல் பாவம் ஒன்றுமில்லை
நிந்தை என்னைப் பேசாதீர்
நீவிர்" என்ருன் பரமசிவம்.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பரமசிவம் ஒரு நாள் தன் வகுப்பிலிருந்து புத்தகம் ஒன்றைத் திருடிக் கொண்டுவந்து தன் தாயிடம் காட்டினுன். தாய் அவனுடைய திருட்டுச் செயலைக் கண்டிக்காமல், பாராட்டிப் பேசினுள். இதனுல் பரமசிவத்தின் திருட்டுப் புத்தி வளரத் தொடங்கியது. பெரியவனுனதும் பரமசிவன் பக்காத் திருடன் ஆகிவிட்டான். பல வீடுகளில் கன்னம் வைத்துத் திருடத் தொடங்கி விட்டான். ஒரு நாள் காவல் வீரர்கள், அவனைக் கையும் களவுமாய்ப் பிடித்து விட்டனர். கையில் விலங்கை மாட்டி நடு வீதியில் நாயைப்போல் இழுத்துச் சென்றனர்; கையிலிருந்த குண்டாந் தடியால் அவன் உடம்பு புண்ணுகும் வரை அடித்தனர்.

இக்கொடிய காட்சியைக் கண்ணுல் கண்ட பரமசிவத்தின் தாயார் 'ஐயோ! ஐயோ!' என்று அலறிக் கொண்டு அவன் பின்னுல் ஓடி வந்தாள். பரமசிவம் தன் தாயை அருகில்

அழைத்தான். அவள் அருகில் வந்ததும் அவளுடைய காதைப் பிடித்துக் கடித்து எடுத்து விட்டான். காதை இழந்த தாய் வீறிட்டுக் கதறினாள். இவனுடைய செயலைக் கண்டு எல்லாரும் இவனை அடிக்க வந்தனர். அப்போது பரமசிவம், "நான் சிறுவயதில் திருடிக் கொண்டு வந்தபோது என்னை இவள் கண்டிக்கவில்லை. இக்காதால் என் திருட்டுச் செயலைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தாள். அன்று என்னை இவள் தடுத்து அறிவு புகட்டியிருந்தால், நான் இன்று இந் நிலைக்கு வந்திருக்க மாட்டேன். என் குற்றத்தைப் பொறுமையோடு கேட்ட இக்காதைக் கடித்ததில் குற்றமென்ன இருக்கிறது?" என்று கூறினான்.

"குற்றத்தை முளையிலேயே
கிள்ளி எறிய வேண்டும்."



# வண்டியிழுத்த காந்தி மகான்



காட்டு வழியில் ஓர் நாளில்
காந்தித் தாத்தா நண்பருடன்
மாட்டு வண்டியின் மீதேறி
மாநகர் நோக்கிச் சென்றாரே.


எட்டி நடந்த மாடுகளில்
ஏதோ ஒன்றின் கழுத்தினிலே
சொட்டுச் சொட்டாய் இரத்தம்வரச்
சோர்வாய் அதுவும் சென்றதடா.

புண்ணைக் கண்டார் காந்திமகான்
புந்தி நொந்தார் காந்திமகான்
கண்ணீர் விட்டார் காந்திமகான்
கருணை கொண்டார் காந்திமகான்.

“புண்ணின் கொடுமை அறியாமல்
பூட்டி விட்டார் இம்மாட்டை!
என்னே கொடுமை!” என்றுசொல்லி
இரக்கப் பட்டார் காந்திமகான்.

கழுத்துப் புண்ணால் மிகவாடும்
காளை மாட்டை அவிழ்த்துவிட்டே
இழுத்து வந்தார் வண்டியினை
என்ன கருணை! கருணையடா!!

ஒரு நாள் காந்தியண்ணல் ஓர் இரட்டை மாட்டு வண்டியில் ஏறிப் பயணம் செய்து கொண்டிருந்தார். வண்டியிழுத்த மாடுகளில் ஒன்று தள்ளாடி நடந்து வந்தது. அதன் கழுத்தில் புண் இருந்தது. அப்புண்ணிலிருந்து இரத்தம் சொட்டுச் சொட்டாகக் கசிந்து கொண்டிருந்தது. இக்காட்சியைக் கண்ட காந்தி அண்ணல் உள்ளம் மிகவும் வருந்தினார். உடனே கழுத்துப் புண்ணால் வருந்திய அம்மாட்டை அவிழ்த்து விட்டுவிட்டு வண்டியைத் தாமே இழுக்கத் தொடங்கினார்.



# ஓநாயும் நாயும்



இரவு நேரம். பசியால் வருந்திய ஓர் ஓநாய். ஏதாவது இரை கிடைக்குமா என்று தேடிக் கொண்டு ஒரு சிற்றூரில் நுழைந்தது. அப்போது எதிரே ஒரு நாய் வந்தது. இரண்டும் நலம் விசாரித்துக் கொண்டன.

**நாய்:**

வானில் நிலாவரும் வேளையிலே—இங்கு
வட்ட மிடுகின்றாய் சாலையிலே
கானில் உணவு கிடைக்காமல் — இங்குக்
கைப்பற்ற வந்தாயோ கோழிகளை?

**ஓநாய்:**

கானில் உணவு கிடைக்கவில்லை—அண்ணா
கடும்பசி எனைவிட்டு நீங்கவில்லை
மேனி மிகவும் இளைத்துவிட்டேன்—காடு
மேடெல்லாம் ஓடிச் சலித்துவிட்டேன்.

நாய் :

பஞ்சம் எனக்குக் கிடையாது—என்றும்
பட்டினி என்னை நெருங்காது
அஞ்சு வகைக்கறி ரொட்டியுடன்—பால்
அன்னமும் நாளும் தவருது.

ஓநாய் :

உண்டு கொழுத்து விளங்குகிருய்—நீ
உருவத்தில் புலிபோலத் தோன்றுகிருய்
அண்டையில் வந்து நெருங்குதற்கே - நான்
அஞ்சிமுதலில் நடுங்கி விட்டேன்.

நாய் :

என்னுடன் நீயும் வந்துவிடு—என்றன்
எசமானுக் குன்னைத் தந்துவிடு
தின்னத் தருவான் இருந்துவிடு—உன்றன்
தீய பழக்கங்கள் விட்டுவிடு.

ஓநாய் :

காட்டினை இன்றே மறந்துவிட்டேன்—உன்
காலடி பற்றத் துணிந்துவிட்டேன்
வீட்டில் நமக்கென்ன வேலையண்ணு?-அதை
விளக்க முறச்சொல்ல வேணுமண்ணு.

நாய் :

கள்ளர் எவரும் அணுகாமல்—வீட்டைக்
காவல் புரிந்திடல் நம்தொழிலாம்
உள்ளம் சிறிதும் வருந்தாமல்—நம்மை
ஊட்டி வளர்ப்ப தவர்தொழிலாம்.

நாய் தன்னுடைய தலைவன் வீட்டுக்கு ஓநாயை அழைத்துக் கொண்டு புறப்பட்டது. நாயின் கழுத்தில் ஒரு தழும்பு இருப்பதைச் செல்லும் வழியில் ஓநாய் கண்டது; அதைப் பற்றி நாயிடம் கேட்டது.

**ஓநாய் :**

கழுத்தில் ஏதோ வடுவொன்றை—என்
கண்க ளிரண்டால் காணுகின்றேன்.
கொழுத்த உன்றன் உடல்தனிலே—இக்
குறையும் வந்தது ஏன்அண்ணே ?

**நாய் :**

அழுந்துகின்ற பட்டையினால்—என்
அழகுத் தோளில் சிறிதாகத்
தழும்பு வந்து சேர்ந்ததடா—இதில்
தவறு சிறிதும் இல்லையடா.

**ஓநாய் :**

அழுந்துகின்ற பட்டையினை—நீ
அணிந்து கொள்வதும் ஏன்அண்ணே ?
தழும்பு வந்து சேராமல்—நீ
தடுத்துக் கொள்ள லாகாதா ?

**நாய் :**

பகலில் என்னைச் சங்கிலியால்—அவர்
பட்டை போட்டுக் கட்டுகிறார்
இரவில் பட்டை தனை நீக்கி—என்னை
எங்கும் திரிய விடுகின்றார்.

இதைக் கேட்டதும் ஓநாய் திரும்பிக் காட்டுக்கு ஓடத் தொடங்கியது. நாய் ஏனென்று கேட்டது.

**ஓநாய் :**

சோற்றைப் பெரிதென்று எண்ணிவிட்டாய்-நீ
சுதந்தர வாழ்வை விற்றுவிட்டாய்!
காற்றைப் போலப் பறந்தோடி—நான்
காட்டில் திரியச் செல்லுகிறேன்.

பாலும் சோறும் கிடைக்குமென்று—நீ
பட்டை கழுத்தில் பூணுகிறுய்?
தோலும் உடலும் மெலிந்தாலும்—இந்தத்
தொல்லே எனக்குத் தேவைஇல்லே.

உரிமை இழந்து வாழ்வதினும்—நம்
உயிரை விடுதல் மேலாகும்
அருமை அண்ணு! இவ்வுரையை—நீ
அறிந்து வாழ்தல் முறையாகும்.






# பாடும் பாப்பா

காலை மலர்ந்ததடி கண்ணே — உன்
கண்கள் மலராதோ கண்ணே
சாலை மரங்களில் ஏறிக் — குயில்
சங்கீதம் பாடுதடி கண்ணே

பூக்கள் விரிந்ததடி கண்ணே — சுற்றிப்
பொன்வண்டு பாடுதடி கண்ணே
காக்கை கரையுதடி கண்ணே — இளம்
கன்றுென்று தாவுதடி கண்ணே


எட்டிக் கடல்மீது பார்க்கும் — கதிர்
எத்தனை விந்தையடி கண்ணே!
பட்டுப்போல் தோன்றுதடி கண்ணே - தங்கப்
பாலம் அமைக்குதடி கண்ணே!



அல்லிக்கண் பூத்துவிடு கண்ணே—என்னை
ஆரத் தழுவிவிடு கண்ணே
முல்லைப்பல் காட்டிவிடு கண்ணே — ஓர்
முத்தம் கொடுத்துவிடு கண்ணே

குத்து விளக்கலவோ கண்ணே — நீ
கோவில் சிலையலவோ கண்ணே
முத்திரைப் பொன்னலவோ கண்ணே — நீ
முத்துச் சரமலவோ கண்ணே

கொஞ்சும் பசுங்கிளியோ கண்ணே—நீ
கூவும் பொறிக்குயிலோ கண்ணே
அஞ்சி நடப்பதென்ன கண்ணே—என்
ஆவியில் கூடிவிட்டாய் கண்ணே



பல்லைத் துலக்கிவிடு கண்ணே — நீ
பாய்ந்துநீர் ஆடிவிடு கண்ணே
நல்ல உடையுடுத்து கண்ணே — கொஞ்சம்
நாணமும் வேண்டுமடி கண்ணே

கூந்தலைப் பின்னிவிடு கண்ணே — மலர்க்
கொத்தொன்றைச் சூடிவிடு கண்ணே
சாந்தினைக் கையிலெடு கண்ணே — பொட்டுச்
சந்திரன் போலஇடு கண்ணே

பள்ளி திறந்ததடி கண்ணே — பெண்கள்
பாதையில் செல்லுகிறார் கண்ணே
புள்ளி மயில்அலவோ கண்ணே — நீ
புத்தகம் தூக்கிவிடு கண்ணே



வள்ளுவன் தந்தகுறள் கண்ணே — என்
வாயில் இனிக்குதடி கண்ணே
அள்ளிப் பருகிடடி கண்ணே — நீ
அன்பைப் பெருக்கிடடி கண்ணே

முத்தமிழ் இன்பமடி கண்ணே — இது
முக்கனி சருக்கரையோ கண்ணே
தித்திக்கும் தேனலவோ கண்ணே — நம்
தீந்தமிழ்ப் பாடலடி கண்ணே

பாரதி பாட்டனடி கண்ணே — நம்
பாவேந்தன் தந்தையடி கண்ணே
வீரர்கள் சோழரடி கண்ணே — அவர்
வெற்றியை முழக்கிடடி கண்ணே



எண்ணும் எழுத்திரண்டும் கண்ணே — மிக
ஏற்றம் உடையகலை கண்ணே
பண்ணும் படக்கலையும் கண்ணே — நீ
பயின்று முடித்திடடி கண்ணே

அன்பொன்றே தெய்வமடி கண்ணே — உன்
அறிவொன்றே கோயிலடி கண்ணே
துன்பம் துடைப்பதுதான் கண்ணே — நல்ல
தொழுகைஎன் றறியாயோ கண்ணே

ஆடற் கலைபயில்வாய் கண்ணே — நீ
அன்புக் கலைபயில்வாய் கண்ணே
பாடம் படித்திடுவாய் கண்ணே — நீ
பண்பை வளர்த்திடுவாய் கண்ணே